# கலைஞனின் கவித்துளிகள்



ஆசிரியர் : திரு.பா.இரமணாகரன்
(மாவையூர் கவி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைஞனின்

## கவித்துளிகள்

திரு.பா.இரமணாகரன்
(மாலையூர் கவி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல் விபரம்


| | | |
|---|---|---|
| தலைப்பு | : | கவிஞனின் கவித்துளிகள் |
| ஆசிரியர் | : | திரு.பா.இரமணாகரன் |
| உரிமை | : | நூலாசிரியருக்கு |
| பக்க வடிவமைப்பு | : | தி.ஸர்வேஸ்வரன் |
| அச்சுப் பதிப்பு | : | வானவில் பதிப்பகம், பண்டத்தரிப்பு. |
| பக்கங்கள் | : | 64 |
| பிரதிகள் | : | 200 |
| விலை | : | |
| ISBN | : | 9 789554 353916 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் நமசிவாய

# வீணாகான குருபீடத்தின் ஆசியுரை



சித்திர ஆசிரியர் திரு.பா.இரமணாகரன் அவர்கள் தனது ஆசிரியப் பணிகளில் இருந்து கொண்டு தனது ஆளுமையை வெளிப்படுத்தும் வகையில் ஒரு புதுக் கவிதையாளர் ஆகவும் தன்னை தமிழ் உலகிற்கு அறிமுகப் படுத்தியுள்ளார். இதனால் தமிழ் உலகு நிச்சயமாக பெருமை அடையும். இவரது ஓவியங்கள் உயிர் ஓட்டமானதாக காணப்படுகின்றது.

இதனை இவர் கற்பித்த பாடசாலைகளில் படைத்த ஓவியங்கள் எடுத்துக் காட்டிக்கொண்டிருக்கின்றன. தனது சித்திரங்களுக்கு அவ்வப்போது மாணவர்களது திறனை வளர்க்கும் முகமாக கவிதை எழுதச் சொல்லி ஊக்கப்படுத்தி வருவதை நான் அறிவேன். ஆனால் இன்று கலைஞனின் கவித்துளிகள் மூலமாகத் தான் ஒரு கலைஞன் என்பதை எடுத்துக் காட்டி இருக்கின்றார்.

மாணவர்களுக்கு கல்வியுடன் நல் ஒழுக்கம், பக்தி, இறை நம்பிக்கை ஊட்டுவதில் பெரு விருப்புடையவராக பணியாற்றுபவர் ஆவார். நல்ல சிந்தனை உடையவரால் தான் கலைகளைப் படைக்க முடியும் அந்த வகையில் தனது ஆசிரியப் பணிகளுக்கு அப்பால் சமூக நலன் கருதி இவ்வாறான எழுத்துப் பணிகளை ஆற்றிவருவது பாராட்டத்தக்கதாகும். சிந்திக்கக் கூடிய வகையில் பல கருத்துக்களை ஓவியங்களாகவும் அதற்கு ஏற்றாற் போல் மாலையாக தொடுத்திருக்கின்றார் திரு.பா.இரமணாகரன் ஆசிரியரது பணிகள் தொடரவும் வெற்றி பெறவும் இறையருள் வேண்டி பிரார்த்தித்து வீணாகான குருபீடம் ஆசீர்வதிக்கின்றது.

**சந்நிதார்ச்சாரியார். வித்தயாசாகரம்,**
சிவஸ்ரீ.சபா.வாசுதேவக்குருக்கள்,
வீணாகான குரு பீடம், குருமார்சந்நிதானம்,
சித்தங்கேணி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துச் செய்தி



சண்டிலிப்பாய் கோட்டத்தில் உள்ள யா/மாதகல் சென்யோசவ் மகா வித்தியாலயத்தில் கல்வி கற்பிக்கும் திரு.பா.இரமணாகரன் அவர்கள் பல்துறைசார்ந்த விற்பனராக இருப்பதை அவரது கவிதைப் புத்தகத்தை வாசிக்கும் போது உணர்கின்றேன்.

கவிஞனாக இரட்டைப் பரிமாணம் எடுத்திருப்பது மெச்சத் தக்கது "கலைஞனின் கவித்துளிகள் என்னும் கவியையை உற்று நோக்கும் போது அவரது சமூக உணர்வு ஆன்மீக தமிழ், பண்பாடு, கலாசாரத்தை பாது காக்க வேண்டும் என்னும் ஆதங்கம் இளையோடி இருப்பதை காணக் கூடியதாகவுள்ளது

தற்போதைய கால கட்டத்தில் இப் பணிகள் எமது சமூகத்திற்கு மிகவும் அவசியமாகும் எதிர் கால இளைஞர் சமூகம் தவறான வழியில் செல்லாது காப்பதற்காக காலத்தின் வெளிப்பாடக இக் கவிதைத் தொகுதி வெளிவருவது மகிழ்விற்குரியது. அவரது தற்துணிவு. சமுதாயப்பற்று, படைப்பாற்றல் என்பன போற்றுதற்கான இவரது பணிகள் தொடர ஆசி கூறி வாழ்த்துகின்றேன்.

நன்றி

**தி.S.சிவானந்தராசா,**
கோட்டக் கல்விப்பணிப்பாளர்,
கோட்டக்கல்வி அலுவலகம்,
சண்டிலிப்பாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



உரை நடையில் உரைப்பதை விட எடுத்துக் கொண்ட கருப் பொருளை கவி நடையில் பேசுகின்ற நிலையில் அந்தந்தக் கருத்துக்கு உரம் சேர்க்கின்றது. இந்நிலையில் யா/மாதகல் சென் யோசப் மகா வித்தியாலயத்தில் சித்திர ஆசிரியராக கற்பித்தலில் ஈடுபடுகின்ற நிலையில் "கவிஞனின் கவித்துளிகள்" என்னும் நூலினை வெளியிடுவதையிட்டு மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

மரபினையும் நவீனத்துவத்தினையும் கலந்து சித்திரங்கள் வரைந்து அதற்குப் பொருத்தமான இன்றைய சூழலுக்கு அமைய கருப் பொருட்களை கவிதைக்கு தலைப்பிட்டு புதுக்கவிதை வடித்துள்ளமை வாழ்த்துக்குரியது. கவிதையின் உள்ளே கலை, கலாசாரம் ஆன்மீகம், பாரம்பரியங்கள் எதுகை மோனைகளுடன் எடுத்தியம்பும் நிலையில் அவை வாசிக்கவும், சிந்திக்கவும், மனனம் செய்யவும், விறுவிறுப்பான தூண்டுதலை, கிளர்ச்சியை வாசகனிடத்தில் ஏற்படுத்தியுள்ளது.

இவருடைய கவிதை பாரதியார், பாரதிதாசன், மேத்தா, வைரமுத்து, கவிதைகளில் தொட்டுச் செல்வதை அவதானிக்க முடிகின்றது போலச் செய்தல், பின்பற்றல் என்பன பாராட்டுக்குரியது. இதுவே இயற்கையும் கூட மேலும் இந்நூலாசிரியர் மாணவர்களுக்கு கவிதைப் போட்டி வைத்து அவர்களுடைய கவிதைகளை நூலில் இடம்பிடிக்கச் செய்துள்ளமையும் மகிழ்ச்சியான கற்றல் கற்பித்தல் நடைமுறையினையும் கொண்டு எல்லோரையும் வாழவைக்கும் செயற்பாடாக அமைகின்றது.

ஓய்வு நேரத்தை பயனுள்ள வகையில் அமைப்பதற்கு களம் அமைக்கும் முயற்சி, மற்றும் படைப்பாற்றலை தூண்டி ஒளிவீசச்செய்யும் இந்நூலாசிரியருடைய முயற்சியை பாராட்டி வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

**திரு.த.கிருபாகரன்,**
பி.க.ப.(நிர்வாகம்),
வலயக் கல்வி அலுவலகம்,
தென்மராட்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



இன்றைய பூகோள கிராமத்திலே மனிதனுடைய சிந்தனைத் திறனும் தொழிநுட்ப ஆற்றலும் வலுவடைந்து செல்லும் இந்தத் தருணத்திலே பகுத்தறிவாற்றல் கொண்ட மனிதன் தன்னுடைய அறிவுப்பரப்பின் விசாலத்தினை அறிந்து பார்க்கும் வகையில் பல்வேறு நுண்ணிய தொழிநுட்ப சாதனங்கள் கண்டுபிடிக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டும் வருகின்றன.

இது இவ்வாறு இருக்க எமது இளம் தலைமுறையினரும் சரி சிறு பிள்ளைகளும் சரி இன்றைய நிலையிலே வாசிப்புப் பழக்கம் குறைவடைந்து உரிய படைப்பாற்றல் சிந்தனைகள் அற்று தொழிநுட்ப சாதனங்களில் மட்டும் தங்கி இருக்கும் நிலை எவ்வளவிற்கு தனிப்பட்ட ஆளுமைகளை கட்டியெழுப்பும் என் கேள்வியாகவுள்ள இந்நிலையில் திரு.பா.இரமணாகரன் ஆசிரியர் அவர்களுடைய இக் கவிதைத் தொகுப்பானது சிறுவர்களும் சரி இளைஞர்களும் சரி ஓர் எடுத்துக்காட்டாகவும் தங்களாலும் சாதிக்க முடியும் என்ற முன் உதாரணத்தையும் எடுத்துக்காட்டுவதாக அமைகின்றமையை இங்கு இவருடைய இம்முயற்சியினை பாராட்டி வாழ்த்துச் செய்தி தெரிவிப்பதில் பெருமை அடைகின்றேன்.

மேலும் ஆசிரியரின் பல்வேறு வகையான சிந்தனைகளும் ஆக்கவுருப்பெற்று சமூகப் பணியாக ஏற்ற வகையில் வெளிவர வேண்டுமென வாழ்த்தி நிற்கின்றேன்.

**திரு.T.K.பிரபாகரன்,**
ஆசிரிய ஆலோசகர். (சித்திரம்)
வலயக்கல்வி அலுவலகம்,
தீவகம்,
வேலணை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



எமது பாடசாலையில் சித்திர பாடம் கற்பிக்கும் ஆசிரியர் **திரு.பா.இரமணாகரன்** அவர்கள் தன்னுடைய சித்திர பாட மாணவர்களுக்கு மட்டுமன்றி **"யாம் பெற்ற செல்வம் பெறுக வையகம்"** என்னும் பொன் மொழிகளுக்கு இணங்க தன்னுடைய சேவையினை விரிவு படுத்தி தனது பாடத்தில் தேர்ச்சியினை வெளிப்படுத்தும் அதே நேரம் கவிதைத் துறையில் எழுத்து ஆர்வம் உள்ள மாணவர்களையும் எழுதத் தூண்டும் வகையில் பாடசாலை மட்டத்தில் கவிதைப் போட்டியினை ஒழுங்கு செய்து அதற்குரிய பரிசில்களையும் அறிவித்து வரைந்த படத்திற்கு கவிதை எழுதுதல், கவிதைக்கு படம் வரைதல் போன்ற எண்ணக்கருக்களை ஊக்குவித்து மாணவர்களிடத்தில் புதிய சிந்தனைப் போக்கை வளர்க்க முனைகின்றார்.

இதன் வெளிப்பாடு பாடசாலையில் சிறப்பாக செயற்பட்டு வரும் நுண்கலை மன்றத்தின் வெளியீடாக திரு.பா.இரமணாகரன் ஆசிரியரின் கலைஞனின் கவித்துளிகள் எனும் நூல் வெளிவருவதையிட்டு பெருமிதம் அடைகின்றேன். இந்நூலாசிரியர் கலைஞனின் கவித்துளிகள் நூலுக்கு தன்னுடைய பிறந்த இடமான மாவிட்டபுரம் எனும் ஊரை குறிக்கும் வகையில் மாவையூர் கவி, புனை பெயரைக் குறிப்பிட்டடு தன்னுடைய தாயையும் தாய்மண் பாசத்தையும் பெருமையையும் பேசிநிற்பது சிறப்பிற்குரியது.

இன்றைய மாணவர்கள் நாளைய சமூகத்தின் தலைவர்கள் ஆகவே அவர்கள் ஆளுமை உடையவர்களாக வளர்ந்து துணிவுடன் வாழவைப்பது ஒரு சிறந்த ஆசிரியரின் கடமையாகும். ஆகவே இந்நூலாசிரியர் மேற்கொள்ளும் நூலாக்க முயற்சிக்கு என்னுடையதும் பாடசாலை சார்பானதுமான ஆசீர்வாதம் என்றும் துணை நிற்கும் அத்துடன் இவரது அர்ப்பணிப்பான அறிவு, திறன், மனப்பாங்குடன் ஆன்மீகமும் வளர வேண்டுமென்ற அவாவுடன் செயற்படும் ஆசிரியரின் முயற்சி வளரவும், அவரும், அவரது குடும்பமும் உடல் உள ஆராக்கியத்துடன் சிறப்புடன் வாழ எல்லாம் வல்ல இறைவனிடம் ஆசீர் வேண்டி நிற்கின்றேன்.

நன்றி

**திரு.J.E.பங்கிராஸ்,**
அதிபர்,
யா / மாதகல் சென். யோசவ் மகாவித்தியாலயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



சமகாலச் செல்நெறியில் ஆசிரியத்துவம் என்பது பல்துறை சார் ஆற்றல்களையும் புதுமைப்படுத்தப்பட்ட எண்ணக்கருக்களையும் நடைமுறை விடையங் களையும் உள்வாங்கி மாணவர்களை சரியான திசையில் வழிப்படுத்துகின்ற மகத்தான சக்தியாக விளங்குவதோடு புது விடயங்களை கண்டறிகின்ற புத்தாக்க சிந்தை உடையவராகவும் காணப்பட வேண்டுமெனக் கூறப்படுகின்றது.

இந்த அடிப்படையில் எமது பாடசாலையின் சித்திரபாட ஆசிரியரான திரு.பா.இரமணாகரன் அவர்கள் மேற் கூறப்பட்ட ஆசிரியத்துவத்திற்கு எடுத்துக்காட்டாக விளங்குவதோடு மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளிலும் அவர்களது முன்னேற்றத்திலும் அதிகூடிய கரிசனை கொண்டு செயற்படுபவர்.

இவரது கன்னி முயற்சியான கவிதைத் தொகுப்பு வெளியீடு அவரது உள்ளார்ந்த ஆற்றலையும் வாண்மைத்துவத்தையும் எடுத்துக்காட்டுவதோடு சமூகத்தின் புரிந்துணர்வையும் சமூகத்தின் பால் கொண்ட ஈடுபாட்டையும் எடுத்துக்காட்டுவதாக அமைந்துள்ளது. இவரது முயற்சி தொடர வாழ்த்துக்கின்றேன்.

**கு.விக்னரூபன்,**
உப அதிபர்,
யா / மாதகல் சென். ஜோசப் ம.வி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துச் செய்தி



யா/மாதகல் சென்யோசவ் மகா வித்தியாலயத்தில் சித்திர பாடத்தினை கற்பிக்கும் **திரு.பா. இரமணாகரன்** ஆசிரியர் அவர்கள் நல்லதை நினைத்து **"இன்றே செய் நன்றே செய்"** என்ற புது விதிகளின் மொழிகளை துணையாகக் கொண்டு புதிய விதிகளைப் படைப்பவராக விளங்கும் இவர் எமது நுன்கலை மன்றத்தின் செயற்பாடுகளின் வெளிப்பாடாக மேலும் சிறப்பாக "இரேகையில் சித்திரம்" என்னும் சித்திர பாட நூலையும், "கலைஞனின் கவித்துளிகள்" என்னும் கவிதை நூலையும் ஒருங்கே வெளியீடு செய்வதையிட்டு நுன்கலை மன்றம் சார்பாகவும், அதிபர்கள் ஆசிரியர்கள் சார்பாகவும் பாராட்டி வாழ்த்தி நிற்பதில் பெருமை அடைகின்றோம்.

"ஒளியைத்தேடி ஓடிக்கொண்டிருக்கையில் நிஜத்தின் நிழல்கள் என்றும் அழிவதில்லை. அவை என்றும் பின் தொடர்ந்து கொண்டிருக்கும்" அந்தவகையில் தேடல் உள்ளவனுக்கு கற்றல் நின்று விடாது ஆகவே இவருடைய பணி தொடர இறையாசீர் வேண்டி நிற்கின்றேன்.

நன்றி

**திருமதி.தேவஅருட்செல்வம்,**
பொறுப்பாசிரியர்,
நுன்கலை மன்றம்,
யா / மாதகல் சென். யோசவ் ம.வி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



கோப்பாய் பிரதேச செயலரின் ஆளுகைக்கு உட்பட்ட இடைக்காடு அச்சுவேலி J/282 கிராம சேவையாளர் பிரிவில் வசிக்கும் திரு.பா.இரமணாகரன் என அறியப்பட்ட சித்திர ஆசிரியரும் இன்றைய எழுத்தாளர் உலகில் பிரவேசிக்கும் இவர் கன்னி முயற்சியின் மூலம் "கலைஞனின் கவித்துளிகள்" எனும் கவிதை நூலை வெளியிடுவதையிட்டு எம் பிரதேசம் அதன் கலை வளர்ச்சி சார்பாக பெருமையடைகின்றது.

கலை, பண்பாடு, கலாசாரம் என்பன இன்றைய சூழலில் பேணிப்பாதுகாக்க வேண்டிய தேவையாக உள்ளது. எனவே இவருடைய நூலாக்க முயற்சி புதிய கலைஞரையும் இலை மறை காயாக இருக்கும் மாணவர்களின் கவிதை எழுதும் ஆர்வத்தையும் மெருகூட்டி நிற்கின்றது.

காலத்தின் கண்ணாடியாக கலைகள் தோன்றுகின்றன. அவைகள் அக்கால நிகழ்வுகளை படம் பிடித்துக் காட்டுவதோடு அவை தொடர்பான நன்மை, தீமைகள், எதிர்பார்ப்புக்கள் என்பவற்றை தெளிவாக விளக்கி நிற்கின்றது.

ஒரு கலைஞன் சமூகத்தில் இடம்பிடிக்க வேண்டுமெனில் சொல்லப்படுகின்ற விடயம், சொல்லும் விதம், நுட்பம், இரசனை, நயபபு, நகைச்சுவைத் தன்மை, இலகுமொழி என்பன செல்வாக்குச் செலுத்துகின்றன. இவ்வாறாகவே பாரதியாருடைய கவிதைகளும் இலகுவாக மக்களை சென்றடைந்து புரட்சிகரமான சிந்தனைகள் வளர்க்கப்பட்டுள்ளன.

இந்நூலாசிரியருடைய கவிதையிலும் அதன் தொனி, கலை, நுட்பங்கள் அமைந்துள்ளதோடு எதிர்காலத்தை எதிர்வு கூறியும் நிற்கின்றது. எனவே கலை கலாசார உத்தியோகத்தராக இருந்து இவருடைய நூல் முயற்சியை பாராட்டி இன்னும்தொடர வாழ்த்தி நிற்கின்றேன்.

**இ.ஜோன்சன்,**
கலாசார உத்தியோகத்தர்,
பிரதேச செயலகம்,
கோப்பாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை



நிஜங்கள் நீண்ட வரிசையில் படுத்துறங்கிய விதங்கள் கண்டு "கரைப்போன் கரைத்தால் கல்லும் கரையும்" என்பது பழமொழி, இதன் பிறப்பாக கலை உலகில் நிலை உலகைக் காணவேண்டும் எனில் கலைஞர்கள் மீண்டெழுந்து வந்து புதிய பாணியில் புதிய கவிதைகள் படைத்து புத்துணர்ச்சி ஏற்படுத்தும் தேவையுள்ளது.

அந்த வகையில் கலை. கலாசார, சமூகப் பணியோடு சேர்ந்து இன்றைய தேவைக்கு ஏற்ற வகையில் மாணவர்கள் சினிமாவில் எவ்வளவு மோகம் கொள்கிறார்களோ அவ்வளவு மோகம் வாசிப்பில், செவிமடுத்தலில் ஏற்படுத்த வேண்டுமெனில் கவிதை எழுதுதல், இரசனையுடன் வாசித்தல் என்பன வெற்றிகரமாக மாணவர்களின் உள்ளத்தை தொடவேண்டும்.

துள்ளல் நடையும் எழுச்சியான வார்த்தைகளும், விறுவிறுப்பான தொனிப் பொருட்களும் கருத்தாழத்தோடு கவி விதை விதைக்கப்படும் இடத்து அது எவரிடத்தும் ஆழமான "பசுமரத்தாணிபோல்" பதியும் என்பதில் எந்த விதமான சந்தேகமும் இல்லை. இவைகள் என் பாடசாலை வாழ்வில் அனுபவித்த அனுபவங்களும் கூட ஒரு கவி எழுதி வாசிக்க பல கவி எழுதத் தோன்றியது மேலும் எம் ஆசான் திரு.பா.தனபாலன் அவர்களும் கவி வரிகளை வாசித்து யோசித்து விட்டு நல்லாய் இருக்கிறது என்று சொல்லி இன்னும் எழுத வேண்டும் என்று வாழ்த்தினார். இவ்வாறான வாழ்த்துக்கள் இன்னும் கவி எழுதத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூண்டியது. மேலும் இவருடைய தூண்டுதலால் உதயன் பத்திரிகையிலும் பிரசுரமாகி எழுத்தாளன் எனும் கவிதை மாவையூர் கவி எனும் புனை பெயருடன் வெளிவந்தமை குறிப்பிடத்தக்கது. இவ்வாறான செயற்பாடுகள் மேலும் ஒரு புத்தக வடிவிற்கு தூண்டியுள்ளது என்பது மிகையாகாது.

இது மட்டுமல்ல மதிப்புக்குரிய யா/மாதகல் சென்யோசவ் மகா வித்தியாலய அதிபர் அவர்களும் கவிதைப் போட்டி நடாத்துவதற்கும் கவிதை எழுதி புத்தகமாக அமைப்பதற்கும் முன் உதாரணமாக நின்று கவி வரிகளுக்கு வடிவம் கொடுத்து அதனை எழுந்து உலா வரச் செய்கின்ற பெருமை அவரையேசாரும். இப் பாடசாலையில் கற்பிக்கும் ஆசிரியர்களும் கொடுத்த ஊக்கமும் உதவியும் எனக்கு உண்மையான ஆக்கத்தை கொடுப்பதற்கு கருவூலமாக நின்றது என்றால் மிகையாகாது.

இப் படைப்புக்கு திரு.பா.பாலசுப்பிரமணியம் ஆசிரியர் அவர்களும் ஒரு கையினால் சத்தம் வராது இரு கைகள் சேர்ந்தே சத்தம் வரும் என உணர்த்தியதால் இன்று மாவையூர் கவி எழுதிய கவிஞனின் கவித்துளிகள் எனும் நூல் உங்கள் கைகளில் தவழும் எனும் நம்பிக்கையோடு தும்பிக்கையான் துணையோடு இந்நூலாக்கத்திற்கு ஒத்தாசையாகவும், உதவியாகவும் இருந்து வழிநடத்திய, கவிதைப் போட்டியில் பங்கு பற்றிய சகலருக்கும் என்நன்றிகள் என்றும் உரித்தாகும்.

நன்றி.

**மாவையூர் கவி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சமர்ப்பணம்

காலத்தின் தேவை கருதி

பூத்த குயிற்பாட்டை

கோலத்தில் யான் வரைய

கூத்தியவத்தைப் பிள்ளையார்

ஞாலத்தில் தோன்றி தீட்சை அருளியதால்

கலைஞனின் கவித்துளிகளை

பன்னீரால் பொழிந்து பணிந்து

கூத்தியவத்தை பிள்ளைகளுக்கெல்லாம்

பிள்ளையாருக்கு சமர்ப்பணம் செய்கின்றேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



## கணபதி துணை

கணபதி நீ துணையிருக்க
காலமெல்லாம் அருகிருக்க
கவிதை யான் வடித்திருக்க
காமுறுவர் யாவரும் என்கவியை

வினை தீர்த்த வல்லவனே
வீணான காலத்தை விளைதிறனாக்க
விடை கொடுத்த கற்பகனே
விநாயகனே என்றும் துணை நிற்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மாவைக் கந்தனின் அருள் ஒளியில்

மாலைத் தென்றலில், நட்சத்திர வான் வெளியில்

மல்லிகைப் பூ வாசத்தில், நிலவொளியில்

மணல் பரப்பி விளையாடிய வீதி, வளியில்

உள்ள சுத்தமான சுவாசத்தால், துளியில்

உள்ளவரை கூற விசுவாசத்தால், தெளிவில்

இன்று யாம் இயம்பும் கவித்துளிகள்

இறுமாப்புடன் அணி செய்ய உன்னருள்

இமயத்திலிருந்து பொழிய வேண்டி நிற்கும்

இதயமாக, உதயமான சிறு வண்டு யான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொருளடக்கம்


1. கலைஞன் ........................ 1 - 3
2. சிற்பி ........................ 4
3. ஆசிரியம் ........................ 5 - 6
4. அலை ........................ 7
5. மாற்றம் ........................ 8 - 10
6. வைத்தியர் ........................ 11 - 12
7. ஏக்கம் ........................ 13 - 14
8. ஆன்மீகம் ........................ 15 - 17
9. சிந்தனை ........................ 18 - 19
10. மனம் ........................ 20 – 21
11. கல்வி ........................ 22
12. கல்வியின் வெற்றி ................ 23
13. கலாசாரம் ........................ 24 - 25
14. வித்து ........................ 26
15. அன்பு ........................ 27 - 28
16. மூலிகை ........................ 29 - 30
17. கதிரை ........................ 31 - 32


கவிதைப் போட்டிக்குரிய படங்களும் கவிதைகளும்

18. பச்சைக் கிளி ...................... 33 - 39
19. காலம் ........................ 40
20. தாய்ப்பாசம் ........................ 41
21. கொக்கும் மீனும் .................... 42
22. கொக்கு ........................ 43 - 44
23. சுதந்திரப் பறவை ................ 45
24. எழுத்தாளன் ........................ 46 - 47
25. தூக்கம் ........................ 48 - 50
26. நான்மரம் ........................ 51 - 53
27. கோழிக்குஞ்சு ........................ 54 - 55
28. நாயாகும் மாணவப் பருவம் ........... 56 - 59
29. தொலை பேசி ........................ 60 - 62
30. மல்லுக்கட்டும் ஆடு ............ 36 – 64




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைஞன்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலைஞன்

ஓ கலைஞனே!!

எங்கே செல்கின்றாய் ….. ?

காலம் மாறியது

கோலம் மாறியது என்று கூறி

தற்புகழ்ச்சி கலைக்கும்,

கலைஞர்களுக்கும் அழகல்ல

மாறாக பிறர் கலையை

மதித்தலும் புகழ்தலும்

மாற்றுதலும் ஏற்றம் தரும் என்றும்

தோற்றம் எதுவாகினும்

மாற்றம் பெறுதலும்

இறுதியில் ஒரு வடிவம்

பெறுதலே உறுதிகாண்

வாழும் கலை

வாழ்விப்பதும் கலையாகும்

நாளும் பொழுதும் கலையில்

மூழ்கி அர்ப்பணித்த கருவை

உரமேற்றி புடம் போட்டு

வளர்த்தெடுத்து

நாய்க்கும் நரிக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீனியாக்கலாமோ.....?

பச்சோந்தி போல் இருந்து

பணி செய்து வாழ்தலை விட

பிச்சைஎடுத்தல் மேல்

தன் தொழிலே தலையாய கடமையென்று

கற்பனைக்கு வடிவமிடும் சிற்பி

விற்பனைக்குப் போனதுவோ புதிர்...!

வெறுமையிலும் வறுமையிலும்

தனிமையிலும் பொறுமையிலும்

தவம் காத்து

சித்திரம் சித்திபெற

சித்தனாக வாழ்ந்த தவம்

முத்து முத்தான

சித்திரங்களுக்குத் தெரியும்

மாட்டைக் கல்லென்றும்

கல்லை மாடென்றும் கண்ட

கலைக்கு காதிலைப்பூ வைக்கலாமோ ...?

கௌரவ குருவே கேளீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிற்பி



விசித்திரக் குள்ளன்
சரித்திரத்தில் இடம் பிடிக்க
சிற்பக் கலைஞனின்
படைப்பால் படிக்கட்டில
தோன்றினான்
சிற்பியோ!
போதிய சல்லியின்றி
போன திசை தெரியாது?
இல்லாளோடும் இல்லாது
இருப்பிடம் தெரியாது
உருவமறியாது உருகி
உருக்குலைந்து இறுதியில்
மெழுகுவர்த்தியானான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**ஆசிரியம்**

கல்வியெனும் கடலில் மூழ்கி

அறிவு என்னும் முத்தெடுத்து

வாழ்வுஎன்னும் படகில் ஏறி

வெற்றி என்னும் கரையைக் கடந்து

ஞாலம் கண்டு

கோலம் போட்டு

மாயாயாலம் வென்று

தாளம் போட்டு

காலம் வென்ற கல்வியால்

தரவை மாட்டில்

கறவை மாட்டை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனங் கண்டு தட்டிக் கொடுத்து
கல்லில் நார் உரிக்கும்
தொழிலாம் ஆசிரியம் சேர்ந்து
யாவர்க்கும் பணி செய்யத் துணிந்து
நாதியற்றவர்களையும்
நாயகர்களாக்குவதும்
கொலைகாரனை கோபுரத்தில் ஏற்றுவதும்
மாற்றுவதும் போற்றுவதும்
சிற்பியின் கடன் போல்
சீறும் பாம்பையும்
சிகரத்தில் வைத்து
சித்தம் தெளிய
சித்திர அறிவுடன்
எண்ணும் எழுத்தும் சேர்த்து
சிந்திக்க வைத்த கல்வி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அலை



கடல் கடந்து வந்து கரை ஒதுங்கி நின்ற

நிலையில்லா அலை வடிவம்

உனக்கு என்று வடிவமுண்டோ..?

காற்றை நம்பி தோன்றும் ஜீவன்

நீரில் என்றும் வாழும் ஜீவன்

தோன்றி மறையும் எம்மக்கள்

வாழ்வை தொடர்ந்தும் உணர்த்தும் ஜீவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மாற்றம்

கவிதையில் மழை
பொழியக் கண்டேன்
கொதி நிலையில்
குணம் மாறக் கண்டேன்
திருவுடலில் தீ
அணையக் கண்டேன்
தீண்டுவார் மனம்
மலரக் கண்டேன்
மாமனிதரும்
உருவாகக் கண்டேன்
உலகைப் படைக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருவைக் கண்டேன்
உலகெல்லாம் அவை
எழுந்து நிற்கக் கண்டேன்
நிலையில்லா வாழ்விலும்
நிம்மதி கண்டேன்
கலை உலகில்
பிரவேசிக்கக் கண்டேன்
நீதி கேட்டு ஓடியே
நிலையான சமாதானம் கண்டேன்
நின்மதிப் பெருமூச்சிலும்
நிலை நடுங்குவதை உணர்ந்தேன்

மிருகமென்று ஏங்கிய போது - அங்கே
மனிதனைக் கண்டேன் - அவன்
மனிதமாய் வாழ்ந்து காட்டியபோது
மனிதனுள் தெய்வத்தைக் கண்டேன்

மனிதனுள் மறைந்தது மிருகமடா - அன்று
மனிதனை மறைத்தது மனிதனடா - இன்று
மனிதனுள் மறைந்தது தெய்வமடா - நாளை
மூன்றையும் ஒன்றாய்க் காண்போம் என்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையைச் சொன்னால் சிரிப்போமடா..?
மனிதா? சிரிப்பில் பலஅர்த்தம் இருக்குமோடா.....?
சிரிப்பையே வாழ்வாய் எடுப்போமோடா......?
சிந்தையில் உண்மையை ஏற்றி வாழ்வோமோடா..?

அரசியல் இல்லா உலகம் வேண்டும்
அற்புதம் நிறைந்த வருவாய் வேண்டும்
அருமையும் பெருமையும் பேசிடல் வேண்டும்
அநியாயம் அரியனை ஏறாது தடுத்திடல் வேண்டும்

மாவையூர் கவியென்ற புனை பெயரோடு
மான்புடன் படைத்த கவியிது
மாருதப்புரவீகவல்லியின் கதையில்
மாற்றிய முகத்தோடு தோன்றிய கவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வைத்தியர்

நான் உன்னை நாடிவந்த போது
என் பின்னாடி எல்லாம் பார்த்து
சொன்ன ஒரு கண்ணாடி
பின்னால் மறைந்து நின்று
கொல்லும் வாத நாடி
முன்னால் நின்று நின்று
முணுமுணுக்கும் பித்த நாடி
இடையில் நின்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆர்ப்பரிக்கும் கபநாடி

இவை மூன்றையும் சேர்த்து

சம நிலை நாடி

ஓடோடி வந்தேன்

மீண்டும் உன் முன்னாடி

நீ என்னைப் பார்த்து கை நாடி

இதயத் துடிப் பெல்லாம் சொல்ல

நல்ல வினை நாடி


என்னைச் செல்ல வைத்தது

உன் வைத்தியம்

**பதிவுகள் என்றும் பரம்பரையை வாழ வைக்கும்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஏக்கம்

காலம் கனிந்தது கார்முகில் அகன்றது
காவல் என்ற போர்வையில் வேலி போட்டு
காதல் செய்தவர்கள் ஒரு தலைக் காதலை
காலி செய்து போக மண் மேடே மிஞ்சியது

ஊரைத் தெரிய வில்லை
காடு பத்திப் போச்சு
உறவைப் புரிய வில்லை
வயது முற்றிப் போச்சு
போனது போகட்டும் என்று
வயோதிபர் பெருமூச்சு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றோட்டில் நின்று பார்க்கையில்

வந்த உயிர் மூச்சு

உள்ளே நுழைய வேண்டாமென்றதும்

தோன்றிய தெல்லாம் போச்சு

அரசியல் வார்த்தைகளெல்லாம்

வலுவிழந்தது ஆச்சு

எஞ்சியது, கெஞ்சியது, துஞ்சியது எல்லாம்

தண்டிக்கப் பட்டாச்சு

மீதமும் உங்கள் வசமாச்சு

இனியும் காணிநிலம் வேண்டுமா... ?

யாரைக் காவல் காக்க...?

நாவல் மரத்தடியில் நாலுபேர் கூடி நின்று

நாவற் பழம் தின்றுஏப்பமிட்டு

நாவினிக்க மட்டுமல்ல நாசூக்காகவும்

நகைச்சுவையாகவும் பேசினோம்

பனை மரநிழல் தேடி

பசும் புல்லில் படுத்துறங்கி


பட்டம் விட்ட அந்தக் காலம்

பசுமரத்தாணி போல் பதிந்தது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆன்மீகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆன்மீகம்

சித்தனா....? சிவனா....?

வேரறியா முத்தனா..... நீ ?

பேதம் காட்டாது வாழ்தலே

சிவப்பேறென்று உயர்ந்தவனே

ஆதியும் அந்தமும்

அறிந்திலன் யான் என்று

சோதியே வடிவான தெய்வ மென்று

நாளும் பொழுதும் அவனை

நினைத்தோம்பும் அடியானே நீ

அவனுக்கு அடிமையாகி

அவனை உனக்கு அடிமையாக்கி

அவன் பெருமைபேசி

அவன் அருளால் யாதுயிர்க்கும்

வினைபொக்கி அருளும் நீ

வாழும் கலையாம் தியான

முறைகள் போதித்து

உலகமெல்லாம் ஓம் என்னும்

பிரணவப் பொருள் போதித்து நின்றாய்

வாழ்தலில் இன்பம் சிற்றின்பம்

அவன் பால் சாய்தலின் இன்பம் பேரின்பம்

எனக் காட்டி வாழ்ந்து

ஐம்புலன் அடக்கி அமைதியை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவாக்கி எங்கும் நிறைந்தவனை
தனதாக்கி பிறரை உருவாக்கி
பித்தன் என்றும் பேயன் என்றும்
பித்தலாட்டக்காரன் என்றும்
உற்றாரும் உறவினரும் ஊரறியக் கத்தியதும்
தொற்றாத தொழு நோயாம்
தொடர்பாடல் வேண்டாமென்று
தனிமையில் இனிமைகண்டு
தனிமையிலே இறைவனைக் கண்டு
தனிமயிலாய் மரத்தடியில் இருந்து
தலைவிதியே எழுதிய தென்று
தவிர்த்தவர்களுக்கெல்லாம்
தலைவிதியை மாற்றி வைத்தாய்
தவித்தவர்களுக்கு தண்ணீர் கொடுத்தல்
தானம் என்று தர்மம் போதித்து
இதுவே போதுமென்று கூறி
இப்பிறப்பும் மறுபிறப்பும்
இல்லை முற்பிறப்பே காரணமென்று
இதயம் தொட்ட காதல்
இருவரில் ஒருவர் மறந்தாற் போல்
இம்மையில் மறுமை மறைந்த கணமாய்
இறைவனடி சேர
இலக்கணம் வகுத்த குருவே ஆன்மீகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்தனை



சிந்தனையின் ஊற்று
சிகரம் வரை ஆச்சு
சீறியவர் பேச்சு
சிறுமை வரை போச்சு
கொடையின் பெருமை உலகம்
உள்ளவரை அன்று
கொடியவரின் ஆட்டம் உலகம்
நிலைக்கும் வரை என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடையில் காட்டி நில்

ஈதல் கெடுதல் அன்று

சாதல் அழிதலன்று - ஆதலால்

பிறப்பும், இறப்பும், உயர்வும், தாழ்வும்

பொதுமையென்று காண்

நாய்க்கு நன்றி உண்டு

பூனைக்கு சுத்தம் உண்டு

காக்கைக்கு ஒற்றுமை உண்டு

எறும்புக்கு ஒழுங்கு உண்டு

மனிதனிடம் ஏது உண்டு?


தொழிநுட்பம் அழிவுக்கே உண்டு

உன்னிடம் பகுத்தறிவு உண்டு

மாறினால் வெற்றி உண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**மனம்**

கவிதை நொடியிலே

கருத்தின் நடுவிலே

கேட்போர் மனதைப் பொறுத்த வரையிலே

யான் வடிப்பதெல்லாம்

பொய்யெனத் தோன்றினும்

சொல்லியே தீரவேண்டும் - ஏன்

காலத்தின் நியதியும் கூட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனால் சொல்கிறேன்

ஒரு கணம் கேள் மானிடமே

மனதை நினைத்து

தினமும் செத்தான் மனிதன்

குணத்தை வெல்லாத குருடராய் - நின்று

நிரந்தரத்தை நாடாது மாயைக்குள் வாழ்ந்தவிதம்

காலனுக்கு இலஞ்சம் கொடுத்து

என்னைக் காத்திடு என்ற மனம்

சந்தர்ப்பம் தந்தால் யமனிடமே

உயிர் பெற்று அறம்

செய்வேன் என்ற மனம்

இறந்த பின் நினைக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கல்வி

கற்பதுதான் கல்வி யென்று
கல்வியை வரையறுக்காதே
ஏட்டுச் சுரைக்காயை விட
அனுபவக் கல்வியே மேல்
கலையறிந்து கற்று வென்று
தன் நிலையறிந்து ஒழுகாதார்
நீர் இன்றி வீணாக தொலை
பயணம் செய்தாரை ஒக்கும்
பிறந்தோர் எல்லாரும் கற்றாரா...?
இல்லாது அவர் செத்தாரா...?
கற்றவர் எல்லாரும் வாழ்ந்தாரா...?
கடவுள் தான் கண்டாரா...?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## கல்வியின் வெற்றி

ஏழைக்கும் ஏடாகி நின்ற கல்வி
தாழ்மைக்கும் தாலாட்டி நின்ற கல்வி
நேர்மைக்கும் நேராகி நின்ற கல்வி
வாழ்வுக்கும் வழிகாட்டி நின்ற கல்வி
பாமரரையும் பண்டிதராக்கும் கல்வி
உடல் காத்து சுகம் தந்து
மனம் காத்து மானம் காத்து
கடமையுடன் தொழில் செய்து
உலகம் வாழ வழி செய்த கல்வி
கடலிலே படகாகி வானிலே வானூர்தியாகி
தரையிலே வண்டியாகி வழி காட்டும் கல்வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**கலாசாரம்**

தாயும் தந்தையும் பணம் தேட
அக்காளும் தம்பியும் அன்பைத் தேட
வாழ்வில் என்றும் அர்த்தம் தேட
போன இடமெல்லாம் விடை தேட
தேடிப்பிடிக்க தேவாங்கு மாட்ட
தேனென்று பருக அது விசமாகப் போக
உலகை மெல்லாம் இருட்டாகப் போக
நித்தம் வாழ்வு சுமையானதால்
முத்தம் இல்லா வினையானது





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாள் வெட்டும் கும்பலைத் தேடி

வலை வீச்சும்

கொள்ளை கொலைக்கு

பிடி விறாந்தும்

கஞ்சா மாட்ட தப்பிய கைதியும்

சிறந்த குடிமக்கள் பட்டம்

யாழிற்கு அணி செய்யும்

சினிமாப் படம் போக சீனவெடியும்

சீறும் பாம்பாய் தெருவெல்லாம் மரணவீடா...?
மணவீடா...? புரியவில்லை பொங்கலா...?
பண்டிகையா... ? தெரியவில்லை...? தேர்தலா...?

திருவிழாவா...? அறியவில்லை இந்துவா...?

கிறிஸ்தவமா...? என்று

வெடியால் கலாசாரம் புரியவில்லை - மோதவிட்டு

வேடிக்கை பார்க்கும் முகவர் கூட்டத்தால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வித்து

விதைத்து உறங்கிய வித்துக்கள்

முளைத்து வாழ்வில் செழித்த

சொத்துக்கள் இன்று

தாழ்வில் துவண்ட முத்துக்களாய்

மண்ணில் விழுந்து வந்து கொத்துக்களாய்

பூத்து மணம் வீசும் செந்தாமரை இதழ்

விரித்து நீர் மேல் நின்று அலைமகளை

உறைய வைத்தது போல் - நல்

வித்துக்கள் பூமாதேவியை வாழ வைக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பு







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்பு

அலை மடியில் மோதுண்டு
செல்லும் செல்லம் நீ
மெதுமையின் தன்மையே
இளமையின் பூவே
முத்தின் அழகே
அருமையின் வித்தே
அன்பின் சொத்தே
ஆழவந்த மனமே
அடிமை கொண்டாய்
வாழ்க்கை வாழ வென்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மூலிகை

மூலப் பொருளே மூலிகையே
உயிர் காக்கும் சஞ்சீவியென்று
முனிவர்கள் முகர்ந்து உணர்ந்து செப்பியது
மருந்து கால் மதி முக்கால்
மாயம் செய்யுமெனவுணர்ந்து
காலத்தில் வினையாற்றலே சிறந்தது.
வாத நாடி காலையில்
வலுவிழக்க இஞ்சியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பித்த நாடி பகலிலே

கொதிக்காதிருக்க சுக்கும்

கப நாடிக்கு மாலையில்

மருந்தாகக் கடுக்காயும்

சித்தரும் ரிசிகளும் முனிவர்களும்

இறையருளால் ஈர்த்த கொடையான

மருந்தும் மந்திரமும்

பரம்பரையோடு முடிந்தது

பாதி தெரிந்ததும் விசமிகள்

கையில் பட்டு விசமாகிப் போனது

போதிய முறையில் போதிக்காத

ஏட்டுச் சுவடிகள் செல்லரித்துப் போயின

இயற்கையால் உயிர் பெற்ற மனிதருக்கு


இயற்கை வைத்தியமே இரையென்று

இறைவனால் எமக்காக படைத்ததென்று

இனி வரும் சந்ததிக்கு உரைத்து நில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கதிரை

நான் இருக்க கதிரை அல்ல
நாலு பேர் இருக்க கதிரை செய்
நாயகராக நினைத்தால் கதிரைக் கால்கள்
நான்கும் வெறும் முதிரை விறகாகும்

கதிரையில் இருந்து குதிரை விட்டதால்
மதுரையில் இருந்து ஊரை எரித்ததாம்
விதிவரை இருந்து வரைந்த ஏட்டினாலா ...?
சதிவரை இருந்து வந்த சங்கதியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதிக்க நினைத்து
நான்கு கால்கள் துணையிருக்க
நடுவில் நீ இருக்க
பொது விதி சமநிலையாம்.


விதியின், சதியின், சுதியின்,
விளையாட்டில் ஒரு கால்
கழட்டி முக்காலில் முடமாகி
முடிந்த கதிரையின் கதை

விதி வெல்ல நான்கையும்
சமன் செய்து நாலு பேர் இருக்க
வழி செய்து கதிரையைக் காத்து
புதிய விதி செய்வோம் வாரீர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலை மட்டத்தில் முன்னெடுக்கப்பட்ட கவிதைப் போட்டிக்குரிய படங்களும் கவிதைகளும்



### பச்சைக் கிளி

நான் கிளியென்று நீ
பறந்து வந்தாய்
ஆனால் கிளியல்ல
வர்ணப் படமென்று
ஏமாந்து நின்றாய்
உன் தவறா ...?
அது என் தவறா ..?



மாவை கவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளியோ அழகு
அதை விட
நீ அழகு
உன் நிலையோ
இருட்டு - அதில்
எது அழகு ...?

பச்சை பச்சையாய்ப் பேசி
கொச்சப்படுத்தி விட்டாய்
பச்சை மரத்துள்
இலை மறை காயாக நின்று
சமயம் பார்த்து சாப்பிட்டு விட்டாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கிளி படத்திற்கு கவிதை எழுதி போட்டியில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் கவிதைகள்**

## கிளி

தன் எதிர்காலம் என்ன வென்று
தெரியாமல் அடுத்தவர்கள் எதிர்காலம்
பற்றிச் சொல்கிறது கூண்டுக்குள் அடைக்கப்பட்ட கிளி

சுரைக்காய் பிஞ்சின் தலையில்
மிளகாய்ப் பழத்தை செருகி இடையில்
மல்லிகை இலைகள் இறகாய்
பின்புறம் தாழை மடலை வைத்தால்
பச்சைக் கிளியே உன்போல் படைப்பு

கூண்டில் உன்னைப் போட்டதனாலே
தூண்டிற் புழுவாய் துடிக்கிறாய் நீயும்
சிறையில் அடைத்து மகிழ்ந்தேன்
இன்று தெரிந்தேன் சிறைமிகக் கொடிது
மன்னித்திடுவாய் மன்னித்திடுவாய்
வந்ததும் தருவேன் விடுதலை வாழ்வு
பறப்பாய் பறப்பாய் உயரம் பறப்பாய்
கட்டிய கால்கள் விடுபடும்
உடனே எட்டிய மட்டும் பறப்பாய்
எழில் நிறப் பெண்ணே எங்கும் பறப்பாய்

ஆனால் கிளியே கூண்டில் கஷ்டம்
புரிந்தோர் இங்கு ஆண்டிட வந்தார்
மாண்டிட எம்மை கூண்டில் போட்ட - ஏனோ
கிளியே பதில் சொல்வாய் பச்சைக்கிளியே

அ.கெவின்றாஜ் - 9B



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிளி

சின்ன சின்ன கிளியே

சிங்காரக் கிளியே

சிவப்புச் சொண்டு கொண்டு

சிவந்த பழங்கள் தின்னும்

பையப் பையப் பறந்து

பயறு மிளகாய் தின்னும்

கீழே வந்து நீயும்

கொச்ச மழலை பேசி

கொஞ்சக் கதை நீ சொன்னால்

கொத்தப் பழங்கள் தந்திடுவேன்

கிளியே கிளியே வா! வா!

பழங்கள் நிறையத்தருவேன் வா! வா!

டில்சன் - 9A



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளி



அழகான கவிதைகள் பச்சைக்கிளியே

உன்னை நான் தேடுகின்றேன்

உன் ஓசை கேட்கின்றேன்

உன் வர்ணத்தைப் பார்க்கின்றேன்

ஆசைக்கிளியே உன்னை விரும்புபவர்கள் பலபேர்

உன் சொண்டைப் போலவே கிளிச் சொண்டு மாங்காய்

ஒரு பொந்துக்குள் இருந்து நீ வளர்ந்தாய்

உன்னைப் பாதுகாத்தாள் உன்தாய்

பச்சைக் கம்பளத்தில் நீ இருந்தால்

சிவத்த சொண்டில் நான் இருப்பேன்

உன் பச்சை வடிவத்தைப் பார்க்கையில்

என் பசி மறந்தது பச்சைக் கிளியே

உன்மாலை உன்னை அழகு படுத்துகின்றது

உன் பச்சை நிறம் என் கண்களை

கவருகின்றது பச்சைக் கிளியே

இ.றெஜிதாஸ் 11A



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிளி

தனிமையில் ஓவியமாய்

துணையின் இலக்கணமாய்

இனிமையயின் பரவசமாய்

கனிவான அதன் பார்வை

எதிர்பார்ப்பின் இமயத்தில்

எதிர் நீச்சலை ஆரம்பித்தேன்

எதிர்காலக் கனவுகளுடன்

சங்கமித்தாள் அந்த பச்சைக் கிளி

கனவு நனவாகிட வேண்டும்

கோ.பகிரதன் 11A



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கிளி

வண்ண வண்ண நிறங்களில்
மனதை கொள்ளை கொள்ளும்
பச்சை சிவப்பு நிறங்களில்


காதோரத்தில் உன் ஓசை
கேட்டதும் நீதான் என்று
அறியும் என் மனம் போல
நீ கடித்ததும் கனிக்கும்
அந்தக் கனி
உன் பொந்து ஒரு அரபுப் பொட்டகம்
உன் வாழ்க்கையில் நானும் ஓர் இடம்

அ.கிரிதரன் A/L 2017



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலம்



கொக்கு மீனைப் பதம் பார்க்குமாம்
வான் பலத்தில் ஆடி
மீனோ கொக்கைப் பதம் பார்க்குமாம்
நீர் பலத்தில் ஆடி
ஓடம் வண்டியில் ஏறும்
தரை பலத்தில்
வண்டி ஓடத்தில் ஏறும்
கடல் பலத்தில் - இறுதியில்
ஆனைக்கும் அடி சறுக்கும்
அனைவர்க்கும் விதி சறுக்கும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெற்றி பெற்ற கவிதைகள்

### தாய்ப் பாசம்

பத்துத் திங்கள் நான் சுமந்த பிள்ளை
உன் பசிக்கு இரையாகும் நிலை
தாய் இருக்கும் நொடி வரை
ஆகாது அந்நிலை

இருவரும் ஒன்றாக இருந்த காலம் எங்கே?
ஒரு நொடியில் எனை விட்டுப் பிரிந்தாய்
பாலூட்டி சீராட்டி வளர்த்த பிள்ளையின்
நிலை கண்டு பதறும் நெஞ்சு

பிள்ளைக்கு வந்த இந்த நிலை
எனக்கு வந்திராதா? நூற்றாண்டு
நீ வாழ்க என நான் வாழ்த்தி
சென்றிருப்பேன் மன மகிழ்வுடன்

இந்நிலை மாறிடாதா?
காலங்கள் கடந்திடாதா?
இறைவனின் மனம் இளக
தாய்ப்பாசம் வென்றிடாதா?

கு.மேரி தர்சிகா A/L - 2018



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொக்கும் மீனும்



வெள்ளை நிறக் கொக்கு இது
நீண்ட கழுத்துக் கொக்கு
நீண்ட அலகு கொண்டு
மீனைப் பிடிக்கும் கொக்கு

எனது குஞ்சை உண்ணாது
விடுமோ என்று
ஏங்கித் தவிக்கும் தாய் - நீ
அதன் ஏக்கத்தைப் போக்க வல்லவர்
யாராவது இவ் வையகத்தில் உள்ளாரோ?

இ.அன்ரனி லக்சன் - $8^A$



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொக்கு

வெள்ளை நிறக் கொக்கு இது
உயரமான கொக்கு
நீண்ட அலகு கொண்டு
மீன்களைப் பிடிக்கும் கொக்கு
ஒற்றைக் காலில் நின்று
தந்திரமாய் ஒன்பது மீன் பிடிக்குமாம்
தனது குஞ்சை பாது காக்க தாய் மீன் பாயுமாம்
அந்தக் குஞ்சின் முடிவு இப்போது ஆகுமா?
தாய் மீன் ஏங்குமா?

V.உமாசுதன் 8[B]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொக்கு

கொக்கே கொக்கே வெள் கொக்கே நீ ஒரு
புத்திசாலி வெண் கொக்கே

ஒற்றைக் காலில் நீரில் நின்றே

மீன்களைப் பிடிப்பாயே

சிறு மீன்களைப் பிடிக்கும் போது தானே

தாய் மீன் அழுவதைப் பார்த்தும் கூட உன் கல்
இதயம் மென்மையாக வில்லையா?

ஏய் கொக்கே நீ சிறியதாய் இருந்த போது உன் தாய் கூட
வேட்டையாளர்களிடம் இருந்து உன்னைக் காய்பாற்றி
இப்படித்தான் அழுதிருப்பார்

அப்போது கூட உன் தாயை அன்பு செய்ய வில்லையா?

கொக்கே நீ புத்திசாலி தான்


ஆனால் சிறு மீன்களைப் பிடித்ததனால் அதன் தாய்
அழுவதைப் பார்த்து நீ இரங்கவில்லையா?

இனியாவது சிறு மீன்களைப் பிடித்து உண்ணாதே

ம. உமாசுதன் - 8



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சுதந்திரப் பறவை

எழுத்தாளனே நீ வானில் எழு

படைப்பாளனே நீ வானம் தொடு

நீ வாசி சுதந்திரமாய் என்றும்

நாம் பேச தினம் தோறும்

பறந்து வரும் செய்தியில்

பேனா முனை பேச

பேய்கள் பொய்கள் எல்லாம்

வாய் மூட

வா.. வா.. பறந்து வா

சுதந்திரக் காற்றில்

நனைந்தது வா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எழுத்தாளன்

பத்தி எழுத்தால் பண்புள்ளவனாய் மாற்றி

புத்தி புகட்டிய எழுத்தாளன்

படைப்பாளன் நீ ஒரு

பகுத்தறிவாளன் நீதியற்றவனை

பாசக்கயிற்றால் கட்டியவன்

பாம்பான மனிதர்களின்

படத்தை எக்றே எடுத்துக் காட்டியவன்

படங்கு போட்டு சூரியனை மறைத்து

படுக்க வைத்து விலங்கு போட்டு குற்ற மற்றவனை

பழிவாங்கிய போதும் - நீ

பறந்து வானில் நின்று

பல செய்தி சேகரித்து

பலிக் கடாக்களை எல்லாம்

பாவியரிடமிருந்து காப்பாற்றி

பாவ புண்ணிய மெல்லாம் மாற்றி

பாற்சோறு ஊட்டியதால்

இன்று அவனும் ஓர் எழுத்தாளன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திர எழுத்தாளன்

சுதந்திரமாய் வாழ் மனிதா

சுதந்திரமாய் வாழ்ந்திடு

பொங்கியெழு மனிதா

பொங்கியெழுந்து வாழ்ந்திடு

விடியலுக்காய் நீங்கள்
எழுதும் சஞ்சிகைகள் எத்தனை

சிறகடித்து பறந்திட சிறிது பொங்கி எழு

உனக்காக வானம் காத்திருக்கிறது

உன் சஞ்சிகைகளுக்காக

மக்கள் காத்திருக்கின்றனர்

சுதந்திரமாய் வாழ்ந்திடவே..... நீ

பிறந்தாய் எழுத்தாளனே

சுகமாய் வாழவே..... நீ

ஆசைப்படுகின்றாய் எனவே...... நீ

உன் ஆக்கத்தை கைவிடாதே

விரைந்து உன் கை வண்ணத்தை

உலகமறிய சுதந்திரமாய்

எழுதிடு உன் ஆக்கங்களை

அ.டிலக்சன் 9A



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**தூக்கம்**

தூக்கமா தம்பி ..?

இதுவென்ன ஏக்கமா தம்பி ..?

தமிழ் மானம் காக்கிறாயா தம்பி?

தூக்கத்திலும் உனக்குத் தம்பி ..?

தமிழின் மேல் காதலா தம்பி ..?

தூங்க வைத்தவர் யார் தம்பி?

அவர் ஆசிரியர் என்றாலும் தம்பி

மன்னித்து விடலாமோ தம்பி ..?

உன் ஏக்கம் புரிகிறது தம்பி

கட்டையில போனாலும் தம்பி

கல்வியை விட மாட்டாய் தம்பி

உன்னை நம்பி நான் இருக்கின்றேன் தம்பி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தூக்கம் - 02

அடுப்படியில் பூனை படுக்க

இடுக்கையில்

குழந்தை தூங்கும்

இது வறுமையின் தூக்கம்

இருக்கையில் நீ தூங்க

படுக்கையில் நாய் தூங்கும்

பெற்றோரின் தூக்கத்தால்

வகுப்பறையை படுக்கையறை

ஆக்குவர் மாணவர்கள்

இது ஓய்வில்லா உழைப்பினால் வந்த

நவீனத்தின் தூக்கம்

தூங்கா நகரத்தையும்

விலை பேசி விற்குமோ

என்று ஏக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றி பெற்ற கவிதைகள்

பள்ளி செல்லும் பாலகனே உனக்குப் பசிக்கேடா?

துன்பமா? எழுந்து போராடு சோம்பலை அகற்றி

எழுந்து நன்பகல் விழித்து

படி நாளை காலம் உனக்காய் கல்விக்காக

வாழ் என்னும் எழுது கருவியை எடு போராடு

பல புத்தகங்களுடன் போராடு

சீர் கெட்ட உலகமதில் சீரும் சிறப்புமுடன்

வாழ வழி தேடு

கல்லு முள்ளெல்லாம் சிதறுண்டு இருக்கும்


கல்விப் பாதையிலே கல்வி என்னும்

பயிருக்காய் கால் வைத்துப் போராடு போராடு

யூ.டினோஜன் 2018 A/L



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## நான் மரம்

கவி சொல்ல நான் கவிஞனும் அல்ல
புலவனும் அல்ல
இருந்தும் காதலிக்கின்றேன் மரத்தை
வாழ விடு மரத்தை
வாழ்த்திவிடு மனிதனை
சூழலை அழித்தாய்
சுற்றுப் புறச் சூழலை அழித்தாய்
நீ இறுதியில் உன்னையும் அழித்தாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நானோ மரம் பேச முடியவில்லை
இருந்தும் பேசுகின்றேன்
வீடு கிடக்கையில்
நாடு படுக்கையில் - ஏன்
நாம் பிச்சையெடுக்கையில்
ஏடு எடுக்க முடியுமா..?
பனை ஓலை இல்லை
நீயோ தூசி தட்டிப் படுக்க
நினைக்கின்றாயா...? மரத்தடியில் முட்டாள்
ஆட்டம் ஓயவில்லை விதைத்தது நீ
அறுவடைக்குத் தயாரா ..?
ஆரம்பத்தில் விட்டோம்
வேண்டாம் வேண்டாம் என்றோம்
வெட்டினாய் சரித்தாய் எரித்தாய்
ஏன் அடித்தும் பார்த்தாய்!
றோங் நம்பர் என்றோம்
சுகம் வரும் ஆள் தப்பாது
இது டாக்டரின் ஆலோசனை
மரத்தடியில் கதைத்தாய் - நீ
ஒன்றும் புரியவில்லை — ஏன்
இன்று வரைக்கும் நான் மரம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# வெற்றி பெற்ற கவிதைகள்

கண்ணீர் துடையாயோ மானிடா ? நான் உன்
தோழனடா நான் சொல்வதை சற்றுக் கேளடா
உன் வியர்வை துடைத்த எனக்கு – நீ
காட்டும் இரக்கம்
இதுவா நன்றி? இல்லயேல் போ
உன்னை நீயே அழிக்கின்றாய் - மழை
இல்லை வெய்யிலில் விளைச்சல் இல்லை
பஞ்சம் உன்னைக் காப்பாற்ற வேண்டுமா?
உன்னைக் காப்பாற்று மனித நேயம்
வாழ மண்ணைப் பார் என்னைப் பார் உன்னைப்பார்.

யூ.டினோஜன் 2018 A/L



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கோழிக் குஞ்சு

இயற்கையின் கூட்டில் குஞ்சு
இறுமாப்புடன் நாட்டில் - இங்கு
முயற்சியால் வந்தது பார் - எங்கும்
கோழிக் குஞ்சுகளின் சத்தம்
நீ தூங்கினால் நித்தம்
நின்மதி அல்ல நிசப்தம்
இதுவே பொதுவான அர்த்தம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெற்றி பெற்ற கவிதைகள்

### கோழிக் குஞ்சு

முட்டை என்பது கோழியினுடையது
அதிலிருந்து வரும் குஞ்சானது
புவியின் சொத்து
முட்டையை அடை காப்பது கோழியாகும்
அக்குஞ்சைப் பேணிப் பாதுகாப்பது
மனிதனின் பண்பாகும்

யூ.சுஜிதன் 9B

### கோழிக் குஞ்சு

சிறையுடைத்து நின்று உலகம்
தாய்மை கொடுத்து வந்தேன்
தன் உலகமதை காண வந்தேன்
சுதந்திரம் காண வந்தேன்
சுற்றித் திரிந்து விளையாட வந்தேன்
தவண்டு தன் நம்பிக்கை காட்ட வந்தேன்
நடந்து நாட்டை காப்பாற்ற கற்றுத் தரவந்தேன்
நல் தோழர் சேர்ந்து
நல் உலகம் போற்ற வந்தேன்.

யூ.டினோஜன் 2018 A/L



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாயாகும் மாணவப் பருவம்



### நாயாகும் மாணவப் பருவம்

புலமைப் பரிசிலில் புலமை பெற
        சித்தி பெற்ற தவம் - இவர்
சித்தப்பாவும் கட்டி வைத்த காட்சி
        இது அரும் பெரும் காட்சி
நாயென்றோ .. பசுவென்றோ ..?
        பாசமில்லாப் பையன் என்றோ
பைத்தியத்தின் சாயலென்றோ ..?
        காயென்றோ .. பழமென்றோ ..
பிஞ்சில பழுத்ததென்றோ
        கடைசியில் காலை வாரி விடுமென்றோ ..?
ஏன் ஈன்றாய் ..? கட்டிவைத்தாய் ..?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாயாகும் மாணவப்பருவம்

சுமைதாங்கி நீ
ஒன்றும் அறியாத பாவம்
கல்வியொன்றே இலக்கென்று
நம்பிய உலக்கையர்கள்
நம்பவைத்துக் கெடுத்தவர்கள்
புடைசூழப் படையெடுத்து
பாவிகளைப் பட்டினி போட்டு
படிக்கையிலே அடித்தவர்கள்
படுக்கையிலே அடித்தவர்கள்
எழுந்து நிற்க நினைத்தாலும்
முடியுமா ..? இவ்வுலகில்
நசுக்கிடாத கள்ளர் ரியூட்டறியில்
நாசம் செய்வோர்
பிரத்தியேக வகுப்பறையில்
பட்டப்பகலில் பள்ளிக்கூடத்தில்
திட்டம் போட்டுத் திருடி விட்டார்கள்
எம் மனித நேயத்தை
மல்லியென்று சொல்லி
கொள்ளிக் கட்டை வைத்து
சொல்லிச் சொல்லி அடித்தும்
சோகம் தந்தவர்கள் எல்லாம்
சோதனை வைத்தால் அதை எழுதி
வேதனைதான் படவேண்டும் - இதை
சாதனை ஆக்குவதே எம்திட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெற்றி பெற்ற கவிதைகள்

பாடசாலையில் படிக்கும் போது - பாடச்
சுமையாய் தவிக்கின்றோம்
சந்தோசமாக இருக்க வேண்டிய வயதில்
சங்கிலியால் கட்டுண்டு வாழ்க்கை இழக்கின்றோம்
அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு போல
அளவோடு கல்வி கற்றால் நற்புகழ்ச்சி கிடைக்கும்

றொ.றொபேட்சன் தரம் - $09^B$

## வெற்றி பெற்ற கவிதைகள்

வாழ்க்கை என்பது நான்கெழுத்து
அதை நான்கு சங்கிலி மூலம் கட்டி வைக்க இயலாது
வாழ்க்கையை அனுபவித்தால் அவன் என்றும் மகிழ்வான்
இல்லையேல் துன்பமாகவே வாழ்வு மாறும்
புத்தகங்கள் மூலம் ஒருவரின் வாழ்வை திருப்பினால்
அவன் வாழ்வை மற்றவர் பார்த்து சிரித்து மகிழ்வர்
புத்தகத்தால் வாழ்வை தடுக்க இயலாது
இவ்வாறு புத்தகம் மூலம் தடுக்கும்
வாழ்வு துன்பம் இன்பம் மாறிவரும்

யூ.சுகிதன் $09^B$



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றி பெற்ற கவிதைகள்


எங்கள் கைகளில் சுமைகளைத் தந்து
தொழிலாளியாக மாற்றத் துடிக்கும்
இந்த சமுதாயம் எங்களுக்கு ஏட்டைத் தந்து
அறிவாளியாக மாற்ற மறுப்பதேன்
எங்களின் கல்வியைத் தான் உங்களால்
தடை செய்ய முடியுமே தவிர
எங்களின் சுய சிந்தனைகளை அல்ல
ஏட்டில் எழுதி நாம் ஒரு சிறந்த
உலகத்தையே உருவாக்குவோம்

இன்று எங்களின் பிஞ்சுக் கைகளில்
நீங்கள் சுமை நிரப்பலாம் நாளை
இந்த உலகத்தை உயர்திப் - படிக்கப்
போவது இன்று நீங்கள் தர மறுக்கும்
ஏட்டுச் சுவடியும் எழுது கருவியும்
என்பதை மறக்காதீர்கள்

இ.தனுசன் தரம் - 09B



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## தொலை பேசி

நான் பேசி நீ பேசி
தொலை பேசி ஆனது
அவன் பேசி அவள் பேசி
தொல்லை பேசி ஆனது
கடல் கடந்தவர்க்கும் அலை பேசி ஆனது
கலோ சொல்ல சுவாசிக்கும்
உயிர் மூச்சானது
நிலையில்லா வாழ்வில்
நித்தம் பேசி
கொலை பேசி ஆனது
விற்காத பொருளையும் விலை பேசியதால்
வாழ்வு மலையேறிப் போனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றி பெற்ற கவிதைகள்

தொலை பேசி என்பது மற்றவரை
தொடர்பு கொள்ளவே
ஆனால் அது உலகமல்ல
பல வர்ணங்களில்
பல வடிவங்களில் வருகின்ற
இந்த தொலை பேசி
இதன் அழகில் மடிவது மனிதர்கள்
வாழ்க்கை என்பது எம்முடையது
அதை இவ்வாறு தான்
வாழவேண்டு மென்று முடிவு
செய்வது தொலை பேசி அல்ல
பலரின் பிரச்சனை தீரும்
பலருக்கு ஆசை கூடும்
இது தொலை பேசியால் நிகழும்
தொலை பேசியை நாம் பயன்படுத்தலாம்
ஆனால் நம்மை தொலை பேசி பயன்படுத்தக் கூடாது.

பூ.சுஜிதன் 9B



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொலை பேசி

அடித்துப் பார்த்தார் மிதித்துப் பார்த்தார்
ஆனால் றோங் நம்பர் என்று சொன்னது
தொலைபேசியோ இவ் உலகத்தை அழித்து வருகிறது
பெரியோர் தொடக்கம் சிறியோர் வரை
வாழ்வை பாழாக்கி வருகிறது

த.தனுராஜ் 9B

## தொலை பேசி

கா கா நான் இல்லையேல் நவீனம் எங்கே?
நாலாய் பிளவுண்ட மனிதரிங்கே
நல்லதை உரைப்பதும் நானே
கெட்டதை உரைப்பதும் நானே
அது உன் பயன்பாட்டிலே

யூ.டினோஜன் 2018 A/L



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மல்லுக்கட்டும் ஆடு



மல்லுக் கட்டும் விலங்கை
மோதவிட்டு— நீ
நடு நிலைமை வகிக்கும்
அளவுக்கு தில்லு முல்லுப்பண்ணும்
விலங்கினமா ...?
இது பறவாயில்லை
ஆடு தோற்றது போக
மீண்டும் இணங்கி வாழும்
ஆனால் .. நீ ஒருகணம்
மோதிப்பார் இருந்த இடம்
இல்லாமல் போவாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆடு

மோதிடும் ஆட்டிடையே – தமிழ்
மரபு மோதிடும் போதினிலே
நம் நாட்டு பண்டைய மரபுகள் மடிந்து போவதை
தட்டிக் காட்டிடுதே

அதன் நடுவில் நிண்டாடும் நடுவர் போல
நம் நாட்டுத் தலைவர்கள்
தடுமாறும் போதினிலே
சமத்துவம் எப்போ…?
நம் நாட்டுக் கலாசாரம் எப்போ …?
சுதந்திரம் எப்போ …?
விடிய வேண்டும் விடிவு காலம்

யூ.டினோஜன் 2018 A/L



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நூலாசிரியர் பற்றி

நூலாசிரியர் திரு.பா.இரமணாகரன் இளம் சித்திரபாட ஆசிரியர். அவர் கவிதைகள் உயிரோட்டமானது. சிந்திக்க வைக்கின்றது. நிகழ்கால நடப்புக்களைப் படம் பிடித்துக் காட்டுகின்றது. கவிதை அவரது கன்னி முயற்சி. கவிதை ஊடாக சித்திரத்தையும், சித்திரத்தின் ஊடாக கவிதையையும் படம் பிடித்துக் காட்டுகின்றார்.

இவ்வாசிரியர் என் மாணவனும் கூட 1993 - 1994 காலப்பகுதியில் யா / பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரியில் தரம் 10, 11 வகுப்பில் என்னிடம் கல்வி கற்ற ஞாபகம் உண்டு. நாட்டின் அமைதியற்ற சூழ்நிலையில் இடப்பெயர்வுகளையும் தாங்கி இன்று சித்திர பாட ஆசிரியராக மிளிர்கின்றார்.

இவர் தனக்கு சரியெனப்பட்டதை செய்வதிலும், செயலிலும் வாழ்ந்து காட்டுபவர். ஏற்கனவே சித்திர பாட நூல்களை வெளியிட்ட பெருமைக்குரியவர். இவருடைய திறமைக்குப் பிறந்த இடமும், புகுந்த இடமும் காரணமென்றால் மிகை ஆகாது. இவரது சகோதரர்கள் ஆசிரியராகவும், அதிபராகவும் இருப்பது பெருமைக் குரியது. இவரது நல் முயற்சி தொடர வாழ்த்துக்கள்.

**திரு.சி.செல்வராஜா,**
உதவிக் கல்விப் பணிப்பாளர்,
தீவக கல்வி வலயம், வேலணை.

9 789554 353916

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org